செய்தி வெளியீடு எண் : 1097 நாள் : 31.07.2024

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 726 ஊராட்சிகளுக்கு 1048 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள், நான் முதல்வன் திட்டத்தில் 4840 பணி நியமன கடிதம், பல்வேறு துறைகளின் சார்பில் 30,000 பயனாளிகளுக்கு ரூ.152 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவை சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இன்று திருச்சி மாவட்டத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளுக்கு 579 கலைஞர் விளையாட்டு உபகரணங்களையும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 கிராம ஊராட்சிகளுக்கு 283 கலைஞர் விளையாட்டு உபகரணங்களையும், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 121 கிராம ஊராட்சிகளுக்கு 186 கலைஞர் விளையாட்டு உபகரணங்களையும் நான் முதல்வன் திட்டத்தில் 4840 பணி நியமன கடிதம், பல்வேறு துறைகளின் சார்பில் 30,000 பயனாளிகளுக்கு ரூ. 152 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, ரூ. 221 கோடி மதிப்பில் புதிய மற்றும் முடிவுற்ற 7950 பணிகளை இன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,**

முத்தமிழ் கலைஞருடைய நூற்றாண்டை முன்னிட்டு திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 726 கிராம ஊராட்சிகளுக்கு 1048 எண்ணிக்கையிலான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அதே போல திருச்சி மாவட்டத்தில் உள்ள நான் முதல்வர் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ள 4840 பேருக்கு பணி நியமனக் கடிதங்களை இந்த மேடையிலே வழங்கியிருக்கின்றோம். நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, பள்ளிக் கல்வித் துறை, சுகாதாரத் துறை, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பாக சுமார் 30,000 பயனாளிகளுக்கு ரூ.152 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் இந்த மேடையிலே வழங்க இருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, ரூ. 21 கோடி மதிப்பிலான புதிய மற்றும் முடிவுற்ற 7950 பணிகளை இன்று தொடங்கி வைக்கின்றோம். திருச்சி என்றாலே திருப்பு முனை என்று

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அப்படிப்பட்ட திருச்சிக்கு வருகை தந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதை நான் பெருமையாக நினைக்கின்றேன். இந்த நிகழ்ச்சி மூன்று நிகழ்ச்சிகளாக நடந்திருக்க வேண்டும். எனினும் நேரத்தின் காலத்தின் அருமை கருதி ஒரே நிகழ்ச்சியாக நடத்தப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு சிறப்பாக சீரோடும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு எனது பாராட்டுக்களையும், நன்றியையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு உங்களுக்கு ஒவ்வொரு நாளும் பல்வேறு நலத்திட்டங்களை தந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அரசின் சாதனைகளை நலத்திட்டங்களை அங்கீகரிக்கும் விதமாக நடைபெற்று முடிந்த மக்களவை தேர்தலில் 40/40 தொகுதிகளிலும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அணியை நீங்கள் மாபெரும் வெற்றியை பெற வைத்தீர்கள். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12575 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களை கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் தொடங்கப்பட்ட திட்டம் தான் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம். இந்த திட்டத்தை கலைஞருடைய நூற்றாண்டில் மதுரை மாநகரில் துவங்கி வைத்தோம். ஏற்கனவே 6 மாவட்டங்கள் கொடுக்கப்பட்டு, அனைத்து ஊராட்சிகளிலும் இன்றைக்கு திருச்சி மாவட்டத்திலுள்ள 404 கிராம ஊராட்சிகளும், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள 121 கிராம ஊராட்சிகளும், அரியலூர் மாவட்டத்தில் உள்ள 202 கிராம ஊராட்சிகளும் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை இன்று வழங்கியிருக்கிறோம்.

இந்த 3 மாவட்டங்களுக்கும் சேர்த்து கிட்டத்தட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களை கொண்ட 1048 எண்ணிக்கையில் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் இன்று வழங்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உலகெங்கும் பல்வேறு சாதனைகளை படைத்து வருகின்றார்கள். குறிப்பாக திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களிலிருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு பெற்றிருக்கின்றது. அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு தான் முக்கியமானவரான தடகள வீரர் தம்பி ராஜேஷ் அவர்கள். திருச்சியைச் சேர்ந்த இவர் SDAT விளையாட்டு விடுதியில் பயின்றவர் என்பது எங்களுக்கு கூடுதல் பெருமை. சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களைக் குவித்து தமிழ்நாட்டிற்கும், இந்திய ஒன்றியத்துக்கும் திருச்சிக்கும் பெருமை சேர்த்த இவர்தான் தம்பி ராஜேஷ் அவர்கள். குறிப்பாக அவர் குறிப்பிட்டது போல விபத்து ஒன்றில் சென்ற ஆண்டு அவர் தன்னுடைய கால்களை இழந்த போதிலும், அவருடைய தளராத முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் இன்றைக்கு பாரா விளையாட்டு தளத்தில் பல சாதனைகளை படைத்து வருகின்றார். அவருக்கு அனைவரும் சார்பாக வாழ்த்துகளையும்,

பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வோம். அதேபோல் இங்கு வருகை தந்துள்ள அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரி ஷர்வானிகா அவர்கள் போட்டியில் பல்வேறு சாதனைகளை உயரங்களைத் தொட்டு வருகின்றார். குறிப்பாக U–7, U–8, U–10 போட்டியில் தங்கம், வெள்ளி என பல பதக்கங்களைக் குவித்து வருகின்றார். Open Chess Festival 2024, Serbia Prestiege 2024 உள்ளிட்ட சர்வதேசப் போட்டிகள், ஆசிய அளவிலான போட்டிகள் என தான் பங்கேற்கும் அனைத்துப் போட்டிகளிலும் சாதனைகளைக் குவித்து வரும் தங்கை ஷர்வானிகாக்கும் நாம் அனைவரும் நம்முடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம். தம்பி ராஜேஷ், தங்கை ஷர்வானிகா இந்த பகுதியிலிருந்து இன்னும் பல 100 விளையாட்டு வீரர்கள் உருவாக உந்து சக்தியாக எடுத்துக்காட்டாக திகழ்கின்றனர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது நகரங்களை மட்டும் தேங்கி விடக் கூடாது.

விளையாட்டுத் துறை வளர்ச்சி என்பது கிராமங்களிலும் இருக்கவேண்டும். அது சென்றடைய வேண்டும். கிராமங்களிலிருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை நாங்கள் துவங்கி வைத்தோம். இந்த விளையாட்டு உபகரணங்களை பயன்படுத்தி கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். விளையாட்டு துறை சார்பாக முதன் முறையாக கலைஞர் அவர்கள் பெயரால் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால் அது கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டம் தான். இன்று விளையாட்டு உபகரணங்களை பெறக்கூடிய இளைஞர்கள் கலைஞர் அவர்களுக்கு இருந்த அந்தத் திறமைகளை, குணங்களை நீங்களும் பெற வேண்டும் என்ற அந்த முறையில் தான் இந்தத் திட்டத்தை வகுத்து இருக்கின்றோம். விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு இன்றைக்கு ஏராளமான சாதனைகளைப் படைத்து வருகின்றது. இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து 16 வீரர்கள் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழைத்து அவருடைய கைகளாலேயே ஊக்கத் தொகையாக தலா ரூ. 7 இலட்சம் என மொத்தம் ரூ 1.12 கோடியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் விளையாடச் சென்றுள்ள தமிழக வீரர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையில் தொடங்கப்பட்டதுதான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை. இதன் மூலம் இது வரை ரூ. 10 கோடி அளவிற்கு நம்முடைய விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நிதி உதவி அளித்துள்ளோம். இதன் காரணமாக தமிழ்நாட்டு வீரர்கள் பல சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று பல பதக்கங்களை குவித்து வருகின்றார்கள். இப்படி பதக்கங்களை வென்ற 600 வீரர்களுக்கு ரூ. 14 கோடியை உயரிய ஊக்கத்தொகை

தொடர்ச்சியாக நேற்று வழங்கினோம் என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு அரசு படைத்துவரும் சாதனைகளைப் பாராட்டி இந்த ஆண்டு The Hindu SportsStar பத்திரிக்கை சார்பாக Best State For Promotion Of Sports மற்றும் CII Sports Business Award நிகழ்ச்சியில் Best State Promoting Sports என்ற உயரிய விருதும் நம்முடைய தமிழ்நாடு அரசு விளையாட்டு துறைக்கு வழங்கப்பட்டது. எனவே இந்த சாதனைப் பயணங்கள் தொடர இளைஞர்கள் உடைய பங்களிப்பு மிகமிக அவசியம். அதுவும் கிராமப்புற இளைஞர்களிடையே பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதற்காகத்தான் இன்று கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தை வழங்கி செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். எனவே கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்கள் பெற்றுள்ள திருச்சி, பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம ஊராட்சிகளுக்கு அவற்றைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இன்றையதினம் நான் முதல்வரின் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 4840 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பணி நியமனக் கடிதங்களை வழங்குகின்றோம். இதன் அடையாளமாக 250 இளைஞர்களுக்கு இந்த மேடையிலே பணி நியமனக் கடிதங்களை வழங்க இருக்கின்றோம். இதன் மூலம் பாலிடெக்னிக், கலை, அறிவியல் மற்றும் பொறியியல் படித்த இளைஞர்கள் ஆண்டுக்கு ரூ. 1.62 இலட்சம் முதல் ரூ.8 இலட்சம் வரையிலான ஊதியத்தில் பணிக்குச் சேர உள்ளீர்கள். உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவருடைய கனவுத் திட்டம் தான் நான் முதல்வன் திட்டம். இன்றைக்கு அந்தத் திட்டம் பல இலட்சம் இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கின்றது. அதற்கு ஒரு சிறிய உதாரணத்தை இங்கு கூற விரும்புகின்றேன். திருச்சி திருவெறும்பூர் சேர்ந்த சகோதரர் அபினேஷ். இளம் வயதிலேயே தன்னுடைய தந்தையை இழந்தவர் அபினேஷ் தனது தாத்தா பாட்டியின் அயராத உழைப்பினால் பள்ளிப் படிப்பை நிறைவு செய்து, துவாக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் டிப்ளமா சிவில் எஞ்சினியரிங் படித்தார்.

இரண்டாம் ஆண்டு படிக்கும்போது நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சிகளை பெற்ற தம்பி அபினேஷ், தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் ஊதியத்தில் மேக்டர்மத் என்ஜினியரிங் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் எனும் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்துள்ளார். அபினேஷ் வாழ்வில் இருந்த ஒரு தலைமுறை இருட்டை நான் முதல்வன் திட்டம் போக்கி உள்ளது என்பதை இங்கே நான் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதே போல் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்தில் மட்டும் 4840 மாணவர்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளார்கள். நான் முதல்வன் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 31 இலட்சம் மாணவர்கள்

பயிற்சி பெற்றுள்ளனர் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். சென்ற ஆண்டில் கிட்டதட்ட 1.20 இலட்சம் மாணவர்கள் வேலை வாய்ப்புகளை பெற்றுள்ள நிலையில் இந்த ஆண்டு நடைபெற்ற நான் முதல்வன் வேலைவாய்ப்பு முகாமில் மூலம் 6 மாத காலத்தில் மட்டுமே 1.03 இலட்சம் இளைஞர்கள் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். இந்தாண்டு இறுதிக்குள் இன்னும் அதிகமான மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற உள்ளனர். எனவே, இங்கு பணிநியமன கடிதங்களை பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். உங்களுடைய புதிய பணி சிறக்கட்டும். நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பணிவாய்ப்பு பெற்றுள்ள நீங்கள் அனைவரும் நாளை முதல் நான்கு பேருக்கு நீங்கள் பணி வாய்ப்பினை கொடுக்க வேண்டிய நிலைக்கு உயர வேண்டும் என்பது தான் இந்த அரசு என்னுடைய நோக்கம். அதற்கு நம்முடைய அரசு உங்களுக்கு எப்பவும் பக்க பலமாகவும், உற்ற துணையாகவும் உடன் நிற்கும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இன்றையதினம் அரசுத் தரப்பில் கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த ஏராளமான திட்டங்களை பயனாளிகளுடைய கைகளுக்குக் கொண்டு சேர்த்துள்ளோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுத்தவரை தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசின் சேவைகள் சென்றடைய வேண்டும்.

ஒவ்வொரு தனி நபரும் நம்முடைய திராவிட மாடல் அரசால் பயன்பெற வேண்டும் என்று தான் செயல்பட்டு வருகிறார்கள். அதன் வெளிப்பாடு தான் மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம், மாணவியருக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம், முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் நம்மைக் காக்கும் நாற்பத்தெட்டு திட்டம். இல்லம் தேடி கல்வி திட்டம் மக்களுடன் முதல்வர் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம் என்றால் அது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக செயல்படுத்தி உள்ள கலைஞர் மகளிர் உரிமை திட்டம். தான் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இந்த ஜீலை மாதம் வரை ரூ.1 கோடி 16 லட்சம் மகளிருக்கு தலா மாதமொன்றுக்கு ரூ. 1000 என்கிற வகையில் மொத்தம் இதுவரை ரூ.11000 கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மூலம் ஒவ்வொரு மகளிருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப்படி அனைத்துத் தரப்பு மக்களுக்குமான திட்டங்களை நம்முடைய அரசு வழங்கி வருகின்றது. இந்தத் திட்டங்களின் காரணத்தால்தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே No. 1 இடத்தில் இருந்து வருகிறது. இதனை ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பே புள்ளி விவரத்தோடு சொல்லுகிறது. இனியும் தொடர்ந்து உங்களுக்காக உழைக்க இந்த அரசும், நம்முடைய முதலமைச்சரும் நாங்களும் தயாராக இருக்கின்றோம். எனவே இந்த திட்டங்களை பயனாளிகள் என்ற அளவில் இல்லாமல்

அவற்றின் பங்கேற்பாளர்கள் என்ற உணர்வோடு நீங்களெல்லாம் செயல்பட வேண்டும். கழக அரசின் திட்டங்களை உங்களுடைய உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எடுத்துச் சொல்லுங்கள். நம்முடைய திராவிட மாநில அரசினுடைய திட்டங்களுக்கு பிராண்ட் அம்பாசிடர். இங்கே வந்திருக்கக்கூடிய பயனாளிகள் நீங்கள் தான் இங்கே வருகைதந்து நலத்திட்ட உதவிகள், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள். நான் முதல்வரின் பணி ஆணைகள் பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய அன்பையும் வாழ்த்தையும் வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இதன் தொடர்ச்சியாக திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா இ.ஆ.ப., பாராளுமன்ற உறுப்பினர் திரு. அருண் நேரு, திருச்சிராப்பள்ளி மேயர் திரு. மு. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. சீ. கதிரவன், திரு. மொ. பழனியாண்டி, திரு. செ. ஸ்டாலின்குமார், திரு. ந. தியாகராஜன், திரு. இனிகோ எஸ். இருதயராஜ், திரு. ப. அப்துல் சமது, திரு. க. சோ. க. கண்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாதரெட்டி, இ.ஆ.ப., திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா. பிரதீப் குமார், இ.ஆ.ப., அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி. ரத்தினசாமி, இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கிரேஸ் லால்ரிண்டிக்கி, இ.ஆ.ப., சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் மருத்துவர். தாரேஸ் அஹமத், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் திருமதி. எஸ். திவ்யதர்ஷினி இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குனர் திருமதி. ஜெ. இன்னொசென்ட் திவ்யா, இ.ஆ.ப., பாரா தடகள வீரர் ராஜேஷ், செஸ் வீராங்கனை ஷர்வானிக்கா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu